DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 757 / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 9 |
| Name | திருமதி முத்தம்மாள் |
| Husband Name | வெள்ளைசாமி |
| Village | முத்தாளங்குறிச்சி |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 60 |

**<u>(1, 3 எதிரிகள் ஆஜர் – 2, 4 எதிரிகள் ஆஜரில்லை: 2, 4 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 17–12–2024.(நேரம்: 2.30PM )**

**<u>முதல்விசாரணை</u>**

1. நான் தற்போது முத்தாளங்குறிச்சியில் தெற்கு ஊரில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் கூலி வேலை செய்கிறேன்.

3. அசா 1 ஐ எனக்கு தெரியும்.

4. இவ்வழக்கின் எதிரிகள் 4 பேரையும் எனக்கு தெரியும்.

5. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பாக பேச்சியம்மாளின் பழைய வீட்டு முன்பு சுடலைமணி பைக்கை வீட்டுமுன்பு நிறுத்தியிருந்தார் . தங்கராஜ் என்பவர் சுடலைமணியிடம் வீட்டு முன்பு ஏன் விட்டிருக்கிறாய் என்று கேட்டதற்கு வண்டியை எடுக்க முடியாது என்று வாய்க்கு வராத பேச்சை பேசினான் . வாய்க்கு வராத பேச்சு கெட்ட வார்த்தைகள் போட்டான்.

6. நான் சண்டையை விலக்க சென்ற போது சுடலைமணி என்னை வாய்க்கு வராத பேச்சு கெட்ட வார்த்தை பேசினான்.

7. மணிமேகலா மற்றும் அவரது பிள்ளைகள் 3 பேரும் என்னை தள்ளினார்கள் . சம்பவம் நடக்கும்போது இரவு 08.00 மணியாகும். சுடலைமணி என்னை கையால் தள்ளி கெட்டவார்த்தை பேசினான். ஏன் தள்ளுகிறாய் என்று கேட்டதற்கு கீழேகிடந்த கல்லை எடுத்து சுடலைமணி என் மீது எறிந்துவிட்டான். நான் கீழே விழுந்ததில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. எரிந்ததில் எனக்கு 3 பல் கீழே விழுந்துவிட்டது.

8.நான் மயக்கம் அடைந்து கீழே விழுந்தவுடன் எனது 2 மகன்களும் ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள் . அங்கு வந்து எனக்கு 6 தையல்கள் போட்டார்கள்.

9. பின்பு திருநெல்வேலி அரசு ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சையில் சேர்த்தார்கள்.

10. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ( 02.40PM)**

**1.** பேச்சியம்மாள் என்ன உறவு முறை என்று கேட்டால் என் மருமகனின் மனைவி ஆவார்.

2. என் மருமகனின் பெயர் என்னவென்றால் மூக்காண்டி என்ற சங்கரையா.

3. காத்தாடி கந்தசாமி என்பவரும் , 2ஆம் எதிரி மணிமேகலாவின் கணவர் நல்லையாவும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

4. சங்கரையாவிற்கு கத்தாடி கந்தசாமி என்ன உறவு முறை என்றால் பெரியப்பா மகன் ஆவார்.

5. கத்தாடி கந்தசாமியும், நல்லையாவும், முத்தாளங்குறிச்சியில் அடுத்தடுத்த வீட்டில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான்.

6. இரண்டு பேருகளின் குடும்பத்தார்களும் வீட்டின் முன்பிருந்த முற்றத்தை பொதுவாக இரண்டு குடும்பத்தார்களும் பயன்படுத்தி வந்தனர் என்று சொன்னால் சரிதான்.

7.கத்தாடி கந்தசாமியின் உடன் பிறந்த சகோதர்கள் 5 நபர்கள் என்றால் சரிதான்.

8. கத்தாடி கந்தசாமியின் உறவினர்கள் அனைவரும் ஒரே தெருவில் தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான்.

9. நல்லையாவின் தகப்பனாருக்கு நல்லையா மட்டுமே ஒரே மகன் என்றால் சரிதான்.

10.நல்லையா நெடுஞ்சாலைதுறையில் பணியாளராக வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான்.

11.நல்லையா என்பவருக்கு சுடலைமணி என்ற மகனும் , செல்வசுந்தரி, கிருஷ்ணவேணி, சுவேதா ஆகிய 3 மகள்களும் உள்ளன என்றால் சரிதான்.

12.ஆஜர்எதிரியான சுடலைமணி கல்லூரியில் பொறியியல் படிப்பு படித்துள்ளார் என்றால் சரிதான்.

13. அதேபோல் செல்வசுந்தரி, கிருஷ்ணவேணி , சுவேதா ஆகிய 3 பேரும் படித்தவர்கள் என்றால் சரிதான்.

14. நீண்ட நாள்கள்வே கத்தாடி கந்தசாமி , சங்கரையா மற்றும் முத்தாம்மாளின் பிள்ளைகளான ராமன், லட்சுமணன் ஆகியோர்களும் நல்லையாவிற்கு அடிக்கடி இடையூர் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

15. வீட்டின் முன்பிருந்த பொதுவாக புலங்கி கொண்டிருந்த முற்றத்தை நல்லையா புலங்ககூடாது என்று சங்கரையா , லெட்சுமணன், ராமன், கத்தாடி கந்தசாமி ஆகியோர்கள் நல்லையாவிற்கு இடைஞ்சல் செய்துகொண்டு வந்தார்கள் என்றால் சரியல்ல.

16. இதுசம்மந்தமாக நல்லையா பல சமயங்களில் காவல் நிலையத்தில் புகார்கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல.

17.அப்போது காவல் துறையின் விசாரணையின் போது நானும், காத்தாடி கந்தசாமியுடன் வந்து கலந்து கொண்டேன் என்றால் சரிதான்.

18. காவல் நிலையத்தில் காவல் துறை உதவி ஆய்வாளர் அவர்கள் நல்லையாவிற்கு இடையூரு செய்யக்கூடாது என்று காத்தாடி கந்தசாமி , ராமன் , லெட்சுமணன் , சங்கரையா ஆகியோரை எச்சரித்து அனுப்பினார்கள் என்றால் சரிதான்.

19. எங்கள் வீட்டிற்கும் , பேச்சியம்மாள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்று கேட்டால் பக்கம் தான்.

20.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் லெட்சுமணன் , ராமன், சங்கரையா, பேச்சியம்மாள், வெள்ளைசாமி, சுரேஷ் என்ற அர்ஜுணன் , கத்தாடி என்ற கந்தசாமி ஆகிய எல்லோரும் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான்.

21.சம்பவம் நடந்த அன்று மேலே சொல்லப்பட்டுள்ள நபர்கள் எல்லோரும் சேர்ந்து எதிரிகளே ஊரே விட்டு வெளியேற்றும் எண்ணத்தில் நல்லையா, மணிமேகலா, மற்றும் அவருடைய பிள்ளைகளான சுடலைமணி, செல்வசுந்தரி, கிருஷ்ணவேனி , சுவேதா

ஆகியோர்களை ஊரை விட்டு காலி செய்து விரட்டுவதற்காக கம்பும் , கல்லையும் கொண்டு தாக்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல.

22.அவ்வாறு தாக்குதல் நடக்கும்போது எதிரிகள் சுடலைமணி , கிருஷ்ணவேணி , மற்றும் நல்லையா ஆகியோர்களுக்கும் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் ஆமாம் , சரிதான்.

23.என மகன்கள் லட்சுமணன் , ராமன், பேரன் தங்கராஜ் , மருமகன் சங்கரையா , மருமகள்பேச்சியம்மாள், வெள்ளைசாமி , சுரேஷ் என்ற அர்ஜுணன் , காத்தாடி கந்தசாமி ஆகியோர் எல்லோரும் எதிரிகளை தாக்கியதால் அவர்கள் பயந்துபோய் அவர்கள் வீட்டிற்கு ஓடி போய் கதவை சாத்தி ஒளிந்து கொண்டார்கள் என்றால் சரியல்ல.

24. லெட்சுமணன் , ராமன், தங்கராஜா, சங்கரையா, பேச்சியம்மாள். வெள்ளைசாமி , சுரேஷ் என்ற கந்தசாமி ஆகியோர்கள் தாங்கள் முந்திகொண்டு செய்துங்கநல்லூர் காவல்நிலையத்தில் எதிரிகள் சுடலைமணி , மற்றும் 2,3,4 எதிரிகள் மற்றும் சுவேதா , நல்லையா மைத்துனர் மகன் காந்தி என்பவர் மீதும் ஒரு புகார் கொடுத்து அவ்வாறு கொடுத்த புகாரின் அடிப்படையில் எதிரி மீது இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

25.பேச்சியம்மாள் , எதிரிகள் மீது கொடுத்த புகாரை பெற்று கொண்ட காவல் துறை உதவி ஆய்வாளராகள் சம்பவம் உண்மையா , பொய்யா என்பதை விசாரிப்பதற்காக முத்தாளங்குறிச்சிக்கு வந்தபின்பு தான் காவல் துறையினர் எதிரிகளை மீட்டு சென்றனர் என்று சொன்னால் சரியல்ல.

26. அதன்பின்னர் 1 ஆம் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் லட்சுமணன் , ராமன், தங்கராஜா, சங்கரையா, பேச்சியம்மாள், வெள்ளைசாமி, சுரேஸ் என்ற அர்ஜுணன் , காத்தாடி என்ற கந்தசாமி ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்ற எண் 83/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல . அந்த வழக்கும் சமூக நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு சிசி 767/2022 ஆக நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

27.வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்று கேட்டால் சம்பவம் நடந்த அன்றே விசாரித்து விட்டார்கள்.

28. எனது போலிஸ் விசாரணையின் போது நல்லையா குடும்பத்தின் மீது இருந்த முன்விரோதம் காரணமாக நல்லையா அவரது மகள் சுவேதா , மணற்கரை காந்தி மகன் லட்சுமணன் குமார் ஆகியோர்கள் பெயர்களையும் பேச்சியம்மாள் சொல்லியதாகபோலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல . நான் அவ்வாறு சொல்லவில்லை.

29. நான் முதல் விசாரணையில் சொல்லியதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், சம்பவம் நடந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

30. எனக்கும், பேச்சியம்மாவிற்கும் ஏற்பட்ட காயங்கள் எல்லாம் என்னுடன் வந்த ஆதரவாளர்கள் எதிரியை தாக்கிய போது அதனால் அப்போது எனக்கு ஏற்பட்ட காயங்கள் என்று சொன்னால் சரியல்ல.

31. எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயங்கள் என்றால் சரியல்ல.

32. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

33. எதிரிகளில் மணிமேகலை தவிற மற்றவர்கள் படித்தவர்கள் என்பதால் அவர்கள் அனைவரும் வேலைக்கு செல்லக்கூடாது என்ற குறுகிய எண்ணத்தில் அவர்கள் மீது பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் வழக்கு பதியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

34. எதிரிகள் என்னை கெட்ட வார்த்தையால் ஏசியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.